[31st October 1958

SRI V. K. KOTHANDARAMAN : ஆனந்தம் சோப் பாக்டரி, குடியாத்தத்தில் ஆரம்பித்து இப்போது மூடு விழா கூட நடத்தப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்கார் கொடுத்திருக்கும் பணத்தை திருப்பிப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI P. KAKKAN : இதனுடைய நிலைமை எனக்குத் தெரியாது. ஒன்றை வைத்துக் கொண்டு பிரமாதப் படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

Emerald Dam in the Kundah Project

* 738 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the area acquired for Emerald Dam in the Kundah Project; and

(b) the rate at which the Red Hill Estate was proposed to be acquired?

THE HON. SRI V. RAMAIAH : (a) Six acres of land have so far been acquired.

(b) Does not arise, as lands in the Red Hill Estate have not so far been acquired or proposed to be acquired for the Project.

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, குந்தா திட்டத்தின் கீழ் வரக் கூடிய நிலங்களை ஆர்ஜிதம் செய்து எடுத்துக் கொள்வதிலே அந்த நிலங்களுக்கு கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் விலை சரியானதல்ல என்று சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? அது விஷயமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : குந்தா திட்டத்திற்கு வேண்டிய நிலமெல்லாம் லேண்ட் அக்விஸிஷன் ஆக்ட் முறைப்படித்தான் வாங்கப் பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM : While acquiring lands for the Emerald Dam, is it a fact that the officer entrusted with the work has put the value of the land at a higher rate when compared with the prevalent rates in the neighbourhood and that he has included also the value of the small plants there at present, by taking into account their yield after 40 years? If so, will the Government make an enquiry into the matter and rectify the irregularity?

THE HON. SRI V. RAMAIAH : Sir, the hon. Member's question contains so many assumptions. I have already stated that the whole acquisition is carried on under the Land Acquisition Act. I do not think there will be any room for such serious irregularities in the matter of acquisition.

SRI T. K. SUBBIAH : ஸார், குந்தா திட்டத்திற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்பாக 50 சத விகிதம் முதலீட்டிலே அட்வான்ஸாகப் பணம் கொடுக்கப்படுகிறதாகத் தெரிகிறது. இது உண்மையா ?

THE HON. SRI V. RAMAIAH : நிலத்திற்கு 50 சதவீதம் முன் கூட்டிக் கொடுப்பதில்லை. ஆனால் அங்கு இருக்கக் கூடிய பயிர்களுக்கு காம்பென்ஸேஷன் என்ற முறையிலே, அங்கு இருக்கக் கூடிய சிறு விவசாயிகள் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க 75 சதவீதம் வரையில் மதிப்பிட்டு

31st October 1958]

உடனடியாகக் கொடுத்து பின்னர் லேண்ட் அக்விஸிஷன் ஆபீஸர் எந்த முறையில் தீர்ப்புச் சொல்லுகிருரோ அந்த முறையில் அப்போது அந்தத் தொகையை மொத்தத்திலிருந்து கழித்து பாக்கி கொடுக்கப்படுகிறது.

Sri J. MATHA GOWDER : குந்தா திட்டத்திற்கு வேண்டிய பூமிகளை ஆர்ஜிதம் செய்தது எந்த வருஷம், கொடுக்கப்பட வேண்டிய தொகைகளை எந்த வருஷத்தில் கொடுத்தார்கள் ? உத்தேசமாக எத்தனை வருஷம் பிடிக்கும் எல்லாத் தொகையையும் கொடுக்க ?

The Hon. Sri V. RAMAIAH : இதிலே கொடுப்பதற்கு பல ஆண்டுகள் நீடிக்க வேண்டியதில்லை. துரிதமாக ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் முயற்சிக்கிறோம்.

Sri M. KALYANASUNDARAM : ஸார், எமரால்ட் எஸ்டேட் என்று சொல்லக்கூடிய எஸ்டேட் ஒனரிடத்திலிருந்து ஆர்ஜிதம் செய்யப் பட்டதா ? எத்தனை ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டது ? அந்த விஸ் தீரணத்தில் எவ்வளவு மரங்கள் இருந்ததாகக் கூறப்பட்டது ? மரத்திற் காக எத்தனை நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri V. RAMAIAH : ஆரம்பத்திலேயே நான் நஷ்ட ஈடு ஒன்றும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னேன். எமரால்ட் எஸ்டேட் என்பதைப் பற்றி தெரியாது. இந்த கேள்வியில் இருப்பது ரெட்ஹில் எஸ்டேட்.

Sri M. KALYANASUNDARAM : Sir, clause (*a*) of the question relates to Emerald Dam.

The Hon. Sri V. RAMAIAH : Emerald Dam is different from Emerald Estate. The question relates to Red Hill Estate. No compensation has been paid to the owners of this Estate.

Sri K. SATTANATHA KARAYALAR : குந்தா திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்ததிலே தவறு இருந்தது என்று எந்த உத்தியோகஸ் தர் மீதாவது நடவடிக்கை எடுககபபட்டிருக்கிறதா ?

The Hon. Sri V. RAMAIAH : நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட அத்தனை பிரச்னைகளும் தீர்ந்தபாடில்லை. விரைவாக நல்ல முறையில் செய்யவேண்டு மென்றுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு பரிசீலனை செய்து வருகிறோம்.

Sri K. SATTANATHA KARAYALAR : On a point of order, Sir. My question is whether the Government have taken any action against any officer in regard to acquisition of any village for the Kundah Project. But there was no answer to that particular question.

Mr. SPEAKER : How can that be a point of order? I cannot force the Minister to give an answer. If the hon. Member is not satisfied he can put a separate question or move a vote of censure against the Minister.

Sri M. KALYANASUNDARAM : எமாரல்டு எஸ்டேட் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக அப்பொழுது அங்கு கலெக்டராக இருந்த அதிகாரியின் மீதும் இன்னும் சில அதிகாரிகள் மீதும் சர்க்காருக்குப் புகார் வந்ததுண்டா ? அந்தப் புகார்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

Mr. SPEAKER : I think the hon. Member must put a separate question. The question is out of order.

[31st October 1958

Sri M. KALYANASUNDARAM : How is it out of order?

Mr. SPEAKER : I have ruled it out of order. He cannot refer to individual officers and their conduct. If he gives notice of a separate question, I shall examine its admissibility on its merits. I am afraid the Leader of the Communist party is questioning my ruling. I would say that questions about individual officers cannot, and should not, in fairness to them, be put as supplementaries. As it is, he is putting the officer and the Minister in a difficult situation which cannot be permitted in a supplementary.

Sri M. KALYANASUNDARAM : With due respect to you, Sir, under what rule, am I prevented from putting such questions?

The Hon. Sri C. SUBRAMANIAM : The main question relates to the area acquired for the Emerald Dam and the rate of compensation paid or to be paid to the Red Hill Estate. Certainly, the question of disciplinary action does not arise. And when the Hon. Speaker says it does not arise, it is rather strange that the Leader of the Communist Party should ask under what rule it does not arise.

Mr. SPEAKER : I have got the rule here, the rule of relevancy. (Laughter.)

Andipatti-Theppampatti road

*739 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, ஆண்டிப்பட்டி–தெப்பம்பட்டி ரோடு போட்டு எத்தனை வருடங்களாகிறது ?

(ஆ) அந்த ரோடு மெட்டல் (metalling) செய்யாததற்குக் காரணம் என்ன ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) Five years.

(*b*) Metalling of the above road has not been included in any of the approved programmes or in the Second Five-Year Plan.

Sri N. R. THIAGARAJAN : முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவங்கப்பட்ட வேலை பூர்த்தியாகாமல் இருந்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்படி பல ரோடுகள், கட்டிடங்களை பாதியிலேயே நிறுத்தி விடுவது நல்லதுதானா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது ஜில்லா போர்டு ரோடு. ஜில்லா போர்டு நடவடிக்கை எடுத்து நடத்த வேண்டியது. அது முக்கியமான ரோடாக இருக்குமேயானால், கனம் தியாகராஜன் அவர்கள், ஸ்பெஷல் ஆபீசர் அவர்களிடத்தில் சொல்லி, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.